செய்தி வெளியீடு எண்:404 நாள்: 28.06.2017

# செய்தி வெளியீடு

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினை தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக நடத்துவது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் இன்று (28.6.2017) தலைமைச் செயலகத்தில், மாநில அளவிலான குழு மற்றும் நூற்றாண்டு விழா மலர் குழுவின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், நூற்றாண்டு விழா சிறப்பு இலச்சினை வெளியிட மாண்புமிகு மக்களவை துணைத் தலைவர் டாக்டர் மு. தம்பிதுரை அவர்கள் பெற்றுக் கொண்டார். மேலும், நூற்றாண்டு விழா விளம்பர குறுந்தகட்டினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினை மிகப் பிரம்மாண்டமாக கொண்டாடுவது குறித்தும், 30.6.2017 அன்று மதுரையில் தொடக்க விழாவினை சிறப்பாக நடத்துவது குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மாநில அளவிலான விழாக் குழு உறுப்பினர்களான மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசுத்துறை மற்றும் அலுவல் சாரா குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மக்கள் போற்றும் மகத்தான மாபெரும் தலைவர், ஏழைகளின் இதயத்தில் நீங்கா இடம் பெற்றுள்ள முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் எண்ணம், குறிக்கோள் மற்றும் செயல், ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத்தரத்தினை முன்னேற்றுவதற்காகவே இருந்தது. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பொன்மனச்செம்மலாக வாழ்ந்து, மறைந்த பின்னரும் தமிழக சரித்திரத்திலும், மக்கள் மனதிலும் நீக்கமற நிறைந்துள்ளார். அவருடைய வழியை பின்பற்றி மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை எளிய மக்களின் துயர் துடைப்பதற்காக பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் புகழுக்கு மேலும் பல்வேறு வகையில் பெருமை சேர்த்தார்கள்.

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவை போற்றும் வகையிலும், அவருடைய புகழ் மக்கள் மனதில் தொடர்ந்து நிலைத்திருக்கும் வகையிலும், பல்வேறு சிறப்புகளை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் செய்துள்ளார்கள். குறிப்பாக, சென்னை, அண்ணா சாலையில் எம்.ஜி.ஆர்.அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்கப்பட்டதோடு, சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவகம் 1992–ஆம் ஆண்டு ரூ.1.96 கோடி செலவில் புனரமைக்கப்பட்டது. அதே ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப்படம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் திறந்து வைக்கப்பட்டு பெருமை சேர்க்கப்பட்டது. மேலும், 2003–ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடத்தில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மார்பளவு வெண்கலச் சிலையுடன் அருங்காட்சியகம் அமைத்திட ஆணையிடப்பட்டு, நிறுவப்பட்டது.

இத்தகைய பெருமைக்குரிய புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் உயரிய லட்சியத்தினையும், சிறப்பினையும் நினைவுகூறும் வண்ணம் புரட்சித்தலைவர் டாக்டர் எம்ஜி.ஆர். நூற்றாண்டு விழாவினை தமிழக அரசின் சார்பில் மாநிலம் முழுவதும் மிகப்பிரம்மாண்டமாக சீரும் சிறப்புடன் நடத்திட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏற்கனவே திட்டமிட்டிருந்தார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினை 30.6.2017 முதல் ஜனவரி 2018 வரை மிகச் சிறப்பாக கொண்டாட உள்ளது. இதன் தொடக்கவிழா 30.6.2017 அன்று மதுரையில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் மதுரையை தொடர்ந்து, அனைத்து மாவட்டங்களிலும் மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்படவுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

22.7.2017–திருப்பூர், 29.7.2017–திருவண்ணாமலை, 5.8.2017–பெரம்பலூர், 9.8.2017–விழுப்புரம், 16.8.2017–கடலூர், 23.8.2017–அரியலூர், 30.8.2017–காஞ்சிபுரம், 2.9.2017–திருவள்ளூர், 6.9.2017–ஈரோடு, 9.9.2017–வேலூர், 11.9.2017–நீலகிரி, 16.9.2017–சேலம், 23.9.2017–கிருஷ்ணகிரி, 30.9.2017–நாமக்கல், 4.10.2017–கரூர்,

9.10.2017–தருமபுரி, 16.10.2017– கன்னியாகுமரி, 23.10.2017–விருதுநகர், 30.10.2017–திருச்சிராப்பள்ளி, 4.11.2017–தேனி, 8.11.2017–திருவாரூர், 13.11.2017–திருநெல்வேலி, 18.11.2017–சிவகங்கை, 22.11.2017–தூத்துக்குடி, 29.11.2017–தஞ்சாவூர், 2.12.2017–கோயம்புத்தூர், 9.12.2017–திண்டுக்கல், 16.12.2017–ராமநாதபுரம், 23.12.2017–நாகப்பட்டினம், 30.12.2017–புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலும், ஜனவரி 2018–ல் நிறைவு விழா சென்னையிலும் மிகப்பிரம்மாண்டமாக கொண்டாடப்படவுள்ளது.

30.6.2017 அன்று மதுரை, பாண்டிகோயில், அம்மா திடலில் தொடக்கவிழா நிகழ்ச்சி மாலை 5.00 மணிக்கு நடைபெறுகிறது. இவ்விழாவிற்கு, மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு ப.தனபால் அவர்களும், மாண்புமிகு மக்களவைத் துணைத்தலைவர் டாக்டர் மு.தம்பிதுரை அவர்களும் சிறப்புரை ஆற்றுகிறார்கள். மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு செல்லூர் கே.ராஜு, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு ஆர்.பி.உதயகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் விழாவிற்கு தலைமையேற்று, பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப்படத்தினை திறந்து வைத்து, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழா பேருரையாற்றுகிறார்கள்.

மேலும், விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டப்பேரவை துணைத்தலைவர் அரசு தலைமை கொறடா, மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி, புதுடெல்லி மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகிறார்கள். தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் வரவேற்புரையாற்றுவார்கள். மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் நன்றியுரையாற்றுகிறார்கள்.

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவினை முன்னிட்டு 30.6.2017 அன்று பிற்பகல் 2.00 மணியளவில், விழா மேடையில் லஷ்மன் ஸ்ருதி குழுவினரின் புரட்சித்தலைவர் புகழ்பாடும் இன்னிசை

**நிகழ்ச்சி, கலைமாமணி பேராசிரியர் முனைவர் கு.ஞானசம்பந்தன் அவர்களின் பட்டிமன்றம், யோகியார் இராமலிங்கம் தலைமையிலான யோகா நிகழ்ச்சி மற்றும் நாட்டிய கலாலயாவின் மாபெரும் பரதநாட்டிய நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், செய்தி மக்கள் தொடர்புத் துறை, மதுரை மாவட்ட நிர்வாகம் செய்து வருகிறார்கள்.**

*** * * * ***

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 28.6.2017**